**செ. கு. எண்**:330 **நாள்**:11.09.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 11.9.2012

ராமநாதபுரம் மாவட்டம், நயினார்கோவில் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. ஆறுமுகம் அவர்கள் 6.9.2012 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தெற்கு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. ப.சங்கர் அவர்கள் 7.9.2012 அன்று பருத்திக்கோட்டை கிராமம், தஞ்சாவூர் - பட்டுக்கோட்டை நெடுஞ்சாலையில் ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாநகர், சிங்காநல்லூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. R.நந்தகுமார் அவர்கள் 19.8.2012 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 7.9.2012 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை, வடபழனி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. T.செல்வராஜ் அவர்கள் 7.9.2012 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

மதுரை மாநகர், கீரைத்துறை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. செந்தில் வடிவேல் அவர்கள் 8.9.2012 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு.சீனிவாசன் அவர்கள் 10.9.2012 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. ஆறுமுகம், திரு. சங்கர், திரு. நந்தகுமார், திரு. செல்வராஜ் மற்றும் தலைமைக் காவலர்கள் திரு. செந்தில் வடிவேல் மற்றும் திரு.சீனிவாசன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாரடைப்பால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ஆறுமுகம், சாலை விபத்துகளில் உயிரிழந்த சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. சங்கர் மற்றும் திரு. நந்தகுமார், உடல்நலக் குறைவால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. செல்வராஜ், தலைமைக் காவலர் திரு. செந்தில் வடிவேல் மற்றும் திரு.சீனிவாசன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**